**Deposition of Witness**
**In the Court of Additional Subordinate Judge, Tenkasi.**

Mcop 254/2019

எ.ம.சா 2 ஆனந்தகுமார்

| | | |
|---|---|---|
| Name | : | ஆனந்தகுமார் |
| Father's name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Occupation | : | |
| Age | : | |
| Date | : | 29.04.2026 |

சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு முதல் விசாரணை நிருபண வாக்குமுலம் தாக்கல்

நான் 3ம் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் புலனாய்வு பிரிவில் பணிபுரிந்து வருகிறேன். நான் என் நிறுவனம் சார்பாக என்னுடைய நிருபண வாக்குமுலம் தாக்கல் செய்துள்ளேன். அதில் கூறப்பட்டுள்ள சங்கதிகள் அனைத்தும் உண்மை. அதிலுள்ள கையெழுத்து என்னுடையது தான்.

1. தென்காசி மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளருக்கு போலி பாலிசி குறித்து 2ம் எதிர்மனுதாரர் மீது நடவடிக்கை எடுக்க கோரி கொடுக்கப்பட்ட புகார் மனு நகல் எ.ம.சா.ஆ 1

2. 1ம் எதிர்மனுதாருக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல் எ.ம.சா.ஆ 2

3. 1ம் எதிர்மனுதாாரருக்கு அனுப்பிய அறிவிப்பு திரும்பி வந்த கவர் எ.ம.சா.ஆ 3

4. 2ம் எதிர்மனுதாருக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல் அஞ்சலக ரசீது எ.ம.சா.ஆ 4

5. புகாரை பெற்றுக்கொண்டதற்கான ஒப்புதல் அட்டை எ.ம.சா.ஆ 5

6. டி.என்.72.ஏஏ 9309 என்ற வாகனத்தின் History எ.ம.சா.ஆ 6

7. அச்சன்புதூர் காவல்நிலையத்தில் கொடுக்கப்பட்ட புகார் மனு நகல் எ.ம.சா.ஆ 7

மனுதாரர்தரப்பில் குறுக்குவிசாரணை

நான் 3ம் எதிர்மனுதாரர் காப்பீடு நிறுவனத்தில் 5 வருடங்களாக பணிபுரிகிறேன். விபத்தில் ஈடுபட்ட டி.என்.72.ஏஏ 9309 என்ற வாகனம் எங்களது காப்பீடு நிறுவனத்தில் முறையாக காப்பீடு செய்யப்பட்டுள்ளது என்றால்

இல்லை. மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கையில் பாலிசி எண். 20133573569400258700000 என்ற எண்ணில் காப்பீடு செய்யப்பட்டுள்ளதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் அது தவறாகும். அது பொய்யான பாலிசி எண் ஆகும். அதிலுள்ள வரிசை எண் தவறாகும். எங்களது நிறுவனத்தில்இருந்து கொடுக்கப்படும் பாலிசியில் கடையில் ஐந்து பூஜியம் வரும். ஒரு பூஜியம் விடுபட்டிருப்பது தட்டச்சு செய்யப்பட்டதில் தவறு இருக்கலாம் என்றால் சரியல்ல. நாங்கள் தாக்கல் செய்துள்ள எதிரூரையில் காப்பீடானது போலியாக செய்யப்பட்டுள்ளது என சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல. சொல்லியுள்ளோம். கூடுதல் எதிரூரையிலும் சொல்லப்பட்டுள்ளது. இது சம்பந்தமாக காவல்துறை கண்காணிப்பாளருக்கு பதிவு தபாலில் புகார் அனுப்பப்பட்டுள்ளது. இதுநாள் வரை இது சம்பந்தமாக நடவடிக்கை எடுக்கப்பட்டதா என்றால் இல்லை. அந்த பாலிசி போலியான பாலிசியை உருவாக்கிய நபர் யார் என்று எங்களது நிறுவனத்தாலோ கண்டுபிடிக்க முடியவில்லை என்றால் சரிதான். மனுதாருக்கு எவ்வித இழப்பீடும் கொடுக்ககூடாது என்பதற்காக போலியான பாலிசி என பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. மனுதாருக்கு எங்களது நிறுவனம் தான் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டது என்றால் சரியல்ல. விபத்து சம்பந்தமாக 1ம் எதிர்மனுதாரர் மீது தான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

MURUGAVEL

Digitally signed by MURUGAVEL
Date: 2026.04.29 18:03:31 +0530